**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*

ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary

: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026, p71-84** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# கோயில் கல்வெட்டுகளில் தமிழ் மாதம் மற்றும் நட்சத்திரங்களின் சிறப்புகளும் அவற்றிக்கான நிவந்தங்களும்

## Significance of Tamil Months And Nakshatras (Asterisms), and the Associated Endowments, as Recorded in Temple Inscriptions

**முனைவர்: பொ.தீபா,**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஸ்ரீ ராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தென்காசி – 627804.

**Dr.P.Deepa*,**
*Assistant Professor and Head, Dept of History,*
*Sri Ram Nallamani Yadava Arts and Science College, Tenkasi – 627804.*
*Email: deeluxmathi@gmail.com.*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
deeluxmathi@gmail.com

**Abstract:** Tamil is not merely a language; it embodies a culture deeply connected to nature. Through profound experience, Tamils gained an indisputable understanding of how nature functions in daily life and how it shapes human existence, basing their way of life upon this knowledge. Accordingly, they tracked the movements of planets and stars, categorising time into eras, years, months, and nakshatras based on natural cycles; they established temples and agricultural systems as the focal points for observing these rhythms. They practised agriculture in alignment with the seasons and utilized the resulting harvests to provide offerings for the worship of deities in temples, scheduled according to the months and star-based travels. Driven by the desire that their endowments should benefit the public, donors recorded their endowments in inscriptions for all to see. Tamil months and Nakshatras (asterisms) played a significant role across various spheres-including kingship, individual life, politics, temple affairs, and agriculture-and inscriptions serve as the evidence that reveals this to us. Drawing upon specific temple inscriptions as primary sources, this study provides details regarding festival endowments-identifying the donors, the timing, the beneficiaries, and the underlying purposes of these gifts. While it is not feasible to examine every single temple inscription, the study of a select few allows us to understand the significance of Tamil months and Nakshatras, as well as the festivals associated with them.

**Keywords:** *Months, Stars, Festival, Holy day, Sacrifice Food, kalam (Paddy measurement), Kalanju (Gold measurement).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.08**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் என்பது மொழி மட்டும் அல்ல. அது இயற்கையோடு இணைந்த பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டது. தங்களுடைய ஆழ்ந்த அனுபவத்தால் அன்றாட வாழ்வில் இயற்கை எவ்வாறு இயங்குகின்றது என்பதையும் அது மனிதனை எவ்வாறு இயக்குகின்றது என்பதையும் ஐயத்திற்கு இடமில்லாது கற்றுணர்ந்து அதன் அடிப்படையில் வாழ்க்கை முறைகளை வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்கள். அந்த வகையில் கிரகங்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றின் நகர்வுகளை கணித்து இயற்கையின் அடிப்படையில் யுகங்கள், வருடங்கள், மாதங்கள், நட்சத்திரங்கள் என பிரித்து அவற்றை பின்பற்றும் இடமாகக் கோயிலையும், தங்களின் முக்கிய தொழிலான வேளாண்மையையும் முறையாக நிர்மானித்தனர். அதன்படி அவர்கள் பருவகாலங்களை பின்பற்றி வேளாண்மை செய்து அதில்வரும் விளைச்சலைக் கொண்டு கோயிலின் இறைவர்களுக்கு மாதங்கள் மற்றும் நட்சத்திர அடிப்படையில் வழிபாடுகளுக்கான நிவந்தங்களையும் செய்து அதை மக்கள் அறியும் வகையில் கல்வெட்டுகளாகவும் பதிவு செய்தனர். மன்னர்கள் மற்றும் தனிமனிதர்களின் வாழ்க்கை, அரசியல், கோயில்கள், வேளாண்மை என அனைத்திலும் இயற்கையின் நகர்வுகளை தெரிவிக்கும் தமிழ் மாதங்கள் மற்றும் நட்சத்திரங்களின் பங்கு இருந்துள்ளன. இவற்றை நமக்கு எடுத்துரைக்கும் ஆதாரமாக கல்வெட்டுகள் இருக்கின்றன. அந்த வகையில் சில கோயில் கல்வெட்டுகளை சான்றுகளாகக் கொண்டு தமிழ் மாதங்கள் மற்றும் நட்சத்திர அடிப்படையில் திருவிழாவுக்கான நிவந்தங்கள் யாரால், எப்போது, யாருக்காக, எதற்காக கொடையாக கொடுக்கப்பட்டது என்ற விவரங்களோடு ஆய்வின் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அனைத்து கோயில் கல்வெட்டுகளையும் ஆய்வு செய்ய முடியாது என்றாலும் ஒரு சில கல்வெட்டுகளின் அடிப்படையில் தமிழ் மாதங்கள் மற்றும் நட்சத்திரங்களின் முக்கியத்துவம் பற்றியும் அதற்கான திருவிழாக்கள் பற்றியும் நம்மால் அறிந்து கொள்ள இயலும்.

**திறவுச் சொற்கள்**: மாதம், நட்சத்திரம், திருவிழா, திருநாள், திருஅமுது, கலம், கழஞ்சு

**முன்னுரை**

**"ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்". குறள் - 484**

எந்த ஒரு செயலின் முழு பயனும் கிடைக்க வேண்டும் என்றால் அதற்கு உரிய காலத்தை ஆராய்ந்து அறிந்து அந்த காலத்தில் அதனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தான் அந்த செயல் கைகூடும். அறிவில் சிறந்த நமது தமிழ் முன்னோர்களும் தங்களின் பல்லாண்டு கால அனுபவத்தினை கொண்டு அத்தகைய கால நிலைகளை வகுத்து வைத்துள்ளனர். இந்த காலம்

என்பது இயற்கையை சார்ந்து அதன் வழியிலேயே செயல்களை செய்வது. இயற்கையின் நிகழ்வுகள் என்பது சூரியனை மையமாக வைத்து அதனை சுற்றி வரும் பூமி உள்ளிட்ட கோள்கள் மற்றும் நட்சத்திர மண்டலங்களின் பயணங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட கால அளவுகள். இந்த கால அளவுகளை தமிழ் மாதங்கள், நட்சத்திரங்கள், திதிகள் என பல பிரிவுகளாக தொகுத்துள்ளனர். அதன்படி எந்த செயல்களை எத்தகைய காலத்தில் செய்தால் நன்மை என்பதை சமயம், மருத்துவம், விவசாயம், இலக்கியம், அரசியல், வானவியல், என பல்வேறு வழிகளிலும் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் பருவ நிலைகளின் மாறுபாடு மற்றும் அதன் முக்கியத்துவம் அறிந்து ஒரு வருடத்தை ஆறு பருவங்களாக பிரித்து கூறப்பட்டுள்ளது.

நக்கீரர் எழுதிய நெடுநல்வாடையிலும் சூரியனின் ராசி மண்டல பயணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

புறநானூறில் கூலூர் கிழார் போன்ற புலவர்கள் சூரியனின் ராசி மண்டல பயணம் பற்றியும் அதன் அளவுகள் பற்றியும் குறிப்பிட்டு உள்ளனர். சிலப்பதிகாரத்திலும் 12 ராசிகள் பற்றியும் அதன் மாதங்கள் பற்றிய குறிப்பும் உள்ளது.

பன்னிரு திருமுறைகளிலும் தமிழ் மாதங்களின் சிறப்புகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

தமிழ் மாதங்களின் சிறப்புகள் இலக்கியங்களில் மட்டும் இல்லாது நமது ஆலயங்களில் ஓவியமாகவும் சிற்பமாகவும் மறை பொருளாக இருக்கின்றது.

தமிழ் மாதங்களின் பெயர்களை நமது முன்னோர்கள் இரண்டு விதமாக தொகுத்துள்ளனர். ஒன்று சூரியனை அடிப்படையாகவும் மற்றொன்று சந்திரனை அடிப்படையாகவும் கொண்டு இந்த மாதங்கள் கணக்கிடப்படுகின்றன. அதில் சூரியனை மையமாக வைத்து மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என 12 ராசி சக்கரங்கள் மாதங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. சந்திரனை அடிப்படையாக வைத்து சித்திரை, வைகாசி, ஆணி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என 12 மாதங்களும் உள்ளன.

சூரிய மாதம் என்பது சூரியன் எந்த ராசியில் பயணம் செய்கின்றதோ அது சூரிய மாதம் ஆகும். சந்திர மாதம் என்பது சூரியன் ஒரு ராசியில் இருக்கும் பொழுது சந்திரன் முழு நிலவாக (பௌர்ணமி) எந்த நட்சத்திரத்தின் வழியே பயணம் செய்கின்றதோ அதுவே சந்திர மாதம் ஆகும். எடுத்துக்காட்டாக சூரியன் சிம்ம ராசியில் இருக்கும் பொழுது சந்திரன் முழு நிலவாக அவிட்டம் நட்சத்திரத்தில் இருக்கும். எனவே அந்த அவிட்டம் நட்சத்திரம் நின்ற வீடு சந்திர மாதமாகிய ஆவணி மாதமாகும்.

இவ்வாறு சூரியன் மற்றும் சந்திரனின் இருப்பை மையமாக வைத்து அதன் அடிப்படையில் பருவங்களாக பிரித்து தங்களின் வேளாண்மை மற்றும் திருவிழாக்களை தமிழ் முன்னோர்கள் கடைபிடித்துள்ளனர். இயற்கையோடு இணைந்த வேளாண்மையும் மற்றும் அதற்கு உறுதுணையாக இருக்கும் தெய்வங்களுக்கு நன்றியும் தெரிவிக்கும் வகையில் திருவிழாக்களை கொண்டாடியுள்ளனர்.

திருவிழாக்கள் என்பது பருவத்தே பயிர் செய் என்ற தமிழ் பழமொழிக்கு ஏற்ப தமிழ் மக்கள் தங்களுடைய பயிர் தொழிலை ஆரம்பம் செய்வதற்கு முன்னதாகவும், அறுவடை முடிந்த பின்னர் தெய்வங்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் செய்யும் வழிமுறைகள். இதன் பொருட்டே ஒவ்வொரு பருவ நிலைக்கேற்ற தமிழ் மாதங்களையும், அதற்கு ஏற்ற தெய்வ வழிபாடுகளையும், அந்த வழிபாடுகளுக்கு தேவையான தானங்களையும் வழங்கி நாடும் மக்களும் செழிப்புற வழி வகுத்துள்ளனர். திருவிழா என்பது சமயம் தொடர்பான நிகழ்வு மட்டும் அல்ல. அதற்கும் மேலாக மன்னன், மக்கள், ஊர் நிர்வாகம், கோயில் நிர்வாகம், வணிக குழுக்கள், இனக் குழுக்கள் என அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு சமூகத்தின் முதல் கடமை என்பதை உணர்ந்து செயல்பட்டுள்ளனர்.

சைவம், வைணவம் என்ற பாகுபாடு இல்லாமல் எண்ணற்ற கோயில்களை தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. அத்தகைய கோயில்கள் ஸ்தலம், மூர்த்தம், தீர்த்தம், புராணம், சிற்பம், கட்டிடக்கலை, ஓவியம் என பற்பல சிறப்பு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வரிசையில் கோயில்களில் உள்ள கல்வெட்டுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. அந்த கல்வெட்டுகளின் துணையோடு தான் தமிழ் சான்றோர்களின் மாண்புகளை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. கல்வெட்டுகள் சொல்லும் தகவல்கள் பல ஆயிரம் என்றாலும் அதில் ஒன்றான தமிழ் மாதம் மற்றும் நட்சத்திரம் தொடர்பான திருவிழாக்கள் மற்றும் நிவந்தங்கள் பற்றிய கல்வெட்டுகளும் தனி சிறப்பை பெறுகின்றன. அத்தகைய கல்வெட்டு சான்றுகளின் அடிப்படையில் தமிழ் மாதங்கள் மற்றும் நட்சத்திர திருவிழாவுக்காக கொடுக்கப்பட்டுள்ள தானங்களை பற்றிய கல்வெட்டு செய்திகளை இங்கு காண்போம்.

**சித்திரை**

தஞ்சாவூர் மாவட்டம் கோவிலடி ஊரில் இருக்கும் திவ்யஞானேஸ்வரர் கோயிலில் ஊர் சபையோர் எடுத்த முடிவின் படி பள்ளி ஸ்ரீதேவி என்பவளுக்கு காடாய் கிடந்த நிலத்தை அரை கழஞ்சு பொன்னுக்கு விற்றுள்ளனர். அந்த பெண்ணும் அதில் இருந்து வரும் விளைச்சலில் இருந்து சித்திரையின் 7 நாள் திருவிழாவை கொண்டாட தினமும் 10 கலம் நெல் என 7 நாளைக்கும் 70 கலம் நெல் அளந்து கொடுத்துள்ளார்.

நெய்யாடியப்பர் கோயிலில் முதலாம் பராந்தகசோழனின் 25ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் கவராமொழி மாதவன் என்பவர் சித்திரை மாத திருவிழாவை நடத்த கொடை கொடுத்த செய்தி இடம் பெற்றுள்ளது.

நன்னிலம் வட்டம் திருவீழிமிழலையின் திருவீழிநாதர் கோயிலில் முதலாம் இராஜராஜ சோழனின் 24ம் ஆட்சி ஆண்டில் திருவீழிமிழலை உடையார் கோயில் கருவூலத்தில் இருந்து 30 காசுகளை பெற்றுக்கொண்ட திருவீழிமிழலை சபையார்கள் அதற்கு வட்டியாக 21 கலம் நெல்லை கொடுக்க வேண்டும். சித்திரை மாதம் 7 நாள் திருவிழாவுக்காக கோயிலுக்கு வரும் சிவனடியார்கள் மற்றும் தவசிகளுக்கு அமுது படைப்பதற்காக நாள் ஒன்றுக்கு முக்குறுணி நெல் என்ற அளவில் 7 நாளைக்கும் 21 கலம் நெல்லை வழங்க வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டம் சக்கரப்பள்ளி சக்கரேஸ்வரர் கோயிலில் முதலாம் சுந்தர பாண்டியனின் 17ம் ஆட்சி ஆண்டில் திருசக்கரப்பள்ளி இறைவனின் உற்சவ மூர்த்தங்களை கண்ணனூர்க் கொப்பம் மற்றும் இரண்டு கரைநாடு ஆகியவற்றை சேர்ந்த வாணிக நகரத்தார்கள் எழுந்தருளச் செய்து சித்திரை திருநாளில் அந்த திருவெழுச்சிக்கான செலவுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**வைகாசி**

காஞ்சிபுரம் மாவட்டம் பெருநகர் ஊரில் பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் விஜய கண்ட கோபாலத் தேவர் தனது 21ம் ஆட்சியாண்டில் வைகாசி மாத விசாக திருவிழாவிற்காக 47 கழஞ்சு பொன் முதலீடாகக் கொடுத்துள்ளார். அதில் இருந்து வரும் வட்டியில் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பின்னாளில் இந்த விழா நடைபெறாமல் போனதால் சம்புவராயர் இராஜராஜ சம்புவராயன் மீண்டும் விழா நடத்தும் பொருட்டு 47 கழஞ்சு பொன்னைக் கொடுத்து அதில் வரும் 7 கழஞ்சு 2 மஞ்சாடி 4 மா வட்டியினை கொண்டு தானத்தார், நியாயத்தார், நியாய முதலிகள் என அனைவரும் சேர்ந்து திருவிழாவை நடத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் தர்மபுரீஸ்வரர் கோயிலில் சுங்கம் தவிர்த்த சோழனின் 39ம் ஆட்சியாண்டில் திருச்சுரமுடையார் கோயில் தேவகன்மி, பதிபாத மூல பட்டுடையார், ஸ்ரீ மகேஸ்வர கண்காணி, கோயில் கணக்கன் ஆகியோருக்கு அனுப்பிய அரசாணையில் கோயிலில் வைகாசி திருவிழாவின் திருவெழுச்சிப் படிக்காக நீர் நிலம், கொல்லை நிலம் என 41 வேலி நிலங்களை கொண்ட திருநீற்றுச்சோழ நல்லூர் என்ற புதிய ஊரினை உருவாக்கி அதை இறையிலி நிலமாக வழங்கியுள்ளார். இதில் இருந்து வரும் கடமை குடிமை வரிகளை கோயிலுக்கு வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

திருச்சோற்றுத்துறை ஓதவனேஸ்வரர் கோயிலில் பெண் ஒருத்தி வைகாசி விசாகத்தின் 7

நாள் திருவிழாவை கொண்டாட ஏற்பாடுகள் செய்ததையும் மாணிக்கம், வைரம், முத்து அடங்கிய நகைகள், வெண்சாமரை, வெள்ளி வட்டில் போன்றவற்றை வழங்கியுள்ளதையும் சோழ மன்னன் பரகேசரியின் கிபி.10ம் நூற்றாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையம்கோட்டையில் உள்ள அக்னீஸ்வரமுடையார் கோயிலில் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் 14ம் ஆட்சி ஆண்டில் கோயிலின் வைகாசி திருநாளில் இரண்டு நாடகம் நடத்துவதற்காக தேவரடியார்க்கு நாற்பது கலம் நெல் வழங்கும் பொருட்டு நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆனி**

திருவண்ணாமலை மாவட்டம் திருவோத்தூர் வேதபுரீஸ்வரர் கோயிலில் மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியனின் 17ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருவோத்தூர் நாயனார் கோயிலில் கண்டியதேவர் என்பவர் மன்னனின் பெயரில் சந்தி மற்றும் ஆனித்திருநாளின் அமுதுபடி மற்றும் படிவெஞ்சனம் ஆகியவற்றுக்காக பாராசூர் நாட்டு தவசி பெரும்பாக்கம் ஊரில் வசூலிக்கப்படும் அனைத்து வரிகளையும் தேவதானமாகக் கொடுத்துள்ளார்.

மேலும் இக்கோயிலில் கிபி.16ம் நூற்றாண்டை சேர்ந்த மற்றுமொரு கல்வெட்டில் கோயிலின் திருஞானசம்பந்தருக்கு ஆனித் திருநாளின் 10ம் நாள் நிறுத்த மண்டபத்தில் நடக்கும் திருக்கண்சாத்து விழாவிற்காக அடைக்காயமுது, சுகந்தம், திருவிளக்கு ஆகிய செலவுகளுக்காக நயினார் திருச்சனை என்பவர் 100 பணமும் 200 குழி நிலமும் கொடுத்து அந்த நிலத்தில் இருந்து வரும் மேல்வாரத்தினையும் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கச்சூர் கச்சபேஸ்வரர் கோயிலில் உள்ள கிபி.12ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டில் ஆனித் திருநாள் கொண்டாடும் பொருட்டு முல்லைப்பாடி ஊரை சேர்ந்த ஒருவர் 5 வேலி நிலத்தை தானமாகக் கொடுத்துள்ளார்.

**ஆடி**

பெரம்பலூரின் கோயில்பாளையத்தில் உள்ள தோனீஸ்வரர் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் 11ம் ஆட்சி ஆண்டில் வரசரித ஈஸ்வரமுடையாருக்கு இவ்வூரைச் சேர்ந்த குன்றந்தேவி குலோத்துங்க சோழியர் என்ற பெண் மகா ஆடிப்பூர நாச்சியாரை எழுந்தருள செய்வதற்காகவும் விளக்கு எரிப்பதற்காகவும் 32 காசுகளை சிவபிராமணர்களிடம் கொடுத்துள்ளார்.

கும்பகோணம் அருகே உடையாளூர் கைலாசநாதர் கோயிலில் கிபி.12ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டில் கோயிலின் எப்போதும் இனிய நாச்சியார் திருவமுதுக்கும் ஆடி மாத பூரத்துக்கும், மார்கழி மாத திருவாதிரைக்கும், தண்ணீர் பந்தலுக்கும் சேர்த்து 35 கலம் இரண்டு

மரக்கால் நெல் தானமாக கொடுக்கப்பட்ட செய்தி உள்ளது.

**ஆவணி**

விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியனின் 8ம் ஆட்சி ஆண்டில் பெருமாளுக்கு ஆவணி மாத திருநாளில் நெய்யாடல் செய்யும் போது ஏற்படும் செலவுகளுக்காக ஸ்ரீ வல்லபன் என்பவர் நிலத்தை தானமாக வழங்கியுள்ளார்.

திண்டிவனம் முன்னூறில் உள்ள ஆடவல்லீஸ்வரர் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் 30ம் ஆட்சி ஆண்டை சேர்ந்த தமிழ்க் கல்வெட்டில் வர்த்தராயன் என்பவர் மன்னனிடம் ஆடவல்ல நாயனார் கோயிலில் அரசனின் பெயரால் ஆவணித் திருநாள் என்ற திருவிழா நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்காக ஓய்மாநாட்டு வன்னியநல்லூரில் 50 நன்செய் வேலியும், நத்தம் கொல்லை நிலங்களில் சரிபாதியும் தேவதானமாக வரியில்லாமல் கொடுக்க மன்னனும் ஆணையிட்டுள்ளார்.

**புரட்டாசி**

காஞ்சிபுரம் மாவட்டம் ஆற்றூரில் உள்ள திருமுக்தீஸ்வரமுடையார் கோயிலில் பாண்டிய மன்னன் இரண்டாம் மாறவர்மன் ஆட்சி காலத்தில் புரட்டாசி மாதத்தின் 9ம் நாள் திருவிழாவை கைகோளர்கள் ஒன்பது பேர் 44 பணம் பெற்றுக் கொண்டு திருவிழாவை நடத்தி வந்தனர். ஆனால் இதற்கு மாற்றாக கோயிலின் சிவ பிராமணர்கள் 175 பணம் பெற்று கொண்டு திருவிழாவை நடத்த உறுதி செய்துள்ளனர். ஏதொரு காரணத்தினாலோ பல மடங்கு அதிக பணம் கொடுத்து வேறு நபர்களிடம் திருவிழா பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதன் மூலம் புரட்டாசி மாத திருவிழாவின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**ஐப்பசி**

தஞ்சாவூர் மாவட்டம் திருசின்னம்பூண்டி சடையார் கோயிலில் உள்ள கல்வெட்டின் படி பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் ஆட்சி காலத்தில் நந்திவர்மனின் மனைவி 6¼ கழஞ்சு பொன்னைக் கொடுத்து, மேலும் ஒவ்வொரு விளைச்சலிலும் ஒரு கழஞ்சுக்கு அரைக்கால் பொன் வீதம் முக்காலே ஐந்துமாப் பொன்னைக் கொண்டு ஐப்பசி, சித்திரை மாதப்பிறப்பு நாட்களில் இறைவனின் திருநீராட்டுக்கு பால், தயிர், நெய், பூ, சந்தானம், குங்கிலியம், இளநீர், 20 வாழைப்பழம், சர்க்கரை வழங்கவும், பணியாளர்கள், பிராமணர்கள் என அனைவருக்கும் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளார். இதற்கான பொறுப்பு சிரிகண்டபுரத்து துணி வணிகரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் தற்போது தருக்காக்குடி என்று அழைக்கப்படும்

ஊரில் உள்ள சிவன் கோயிலில் பிற்கால பாண்டிய மன்னன் சடையவர்மன் பராக்கிரமனின் 5ம் ஆட்சி ஆண்டில் திருக்காய்குடியின் திருகோடீஸ்வரமுடையார் கோயிலில் ஐப்பசி திங்கள் திருஅமுது படைப்பதற்காக பல ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து இறையிலி நிலத்தை வழங்கிய கல்வெட்டு செய்தி உள்ளது.

**கார்த்திகை**

திருப்பூந்துருத்தியில் உள்ள புஷ்பவனேஸ்வரர் கோயிலில் முதலாம் இராஜராஜன் ஆட்சி காலத்தில் பூந்துருத்தி மகாதேவருக்கு கார்த்திகை மாதம் திருவிழா நடத்த காசு கொடுக்கப்பட்ட செய்தி கல்வெட்டில் உள்ளது.

சேலம் மாவட்டம் பேளூரில் உள்ள தான்தோன்றி உடையார் கோயிலில் ராமசாமி நாயக்கர் என்பவர் 1925ம் ஆண்டு தான்தோன்றி ஈஸ்வரர் மற்றும் அட்டபுய பாணி வேணுகோபாலர் ஆகிய இறைவர்களுக்கு கார்த்திகை திருநாள் எடுப்பதற்காக சொத்துக்களை தானமாக கொடுத்துள்ளார்.

**மார்கழி**

தஞ்சாவூரில் உள்ள கோயில்தேவராயன் பேட்டையின் மத்தபுரீஸ்வரர் கோயிலில் ஆதித்த கரிகாலனின் 4ம் ஆட்சி ஆண்டில் திருச்சேலூர் கணபதிக்கு மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் அவல், எள், சர்க்கரை, தேங்காய் ஆகியவற்றை படைப்பதற்காக 45 காசுகளும் அரைக்கால் அக்கமும் கொடையாக கொடுக்கப்பட்ட கல்வெட்டு செய்தி உள்ளது.

மதுரை மாவட்டத்தில் தற்போது குன்னத்தூர் மலை என்று அழைக்கப்படும் குன்றத்தூர் பெருமாள் கோயிலில் கிபி.13ம் நூற்றாண்டு கால கல்வெட்டில் மார்கழி திருவிழாவை நடத்துவதற்காக கொடை வழங்கப்பட்ட செய்தி இடம் பெற்றுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயிலின் மாசிலாமணி ஈஸ்வரர் கோயிலில் இரண்டம் புக்கராயர் ஆட்சியில் வீர நாராயணன் இனக்கு நல்ல பெருமாளான ஒற்றி அரசர் மார்கழி மாதம் திருப்பள்ளி எழுச்சி விழாவின் போது அமுது செய்வதற்காக 50 கலம் நெல்லினை கொடையாக வழங்கியுள்ளார். இது போக 800 குழி நிலமும் அசங்காத கண்டன் என்னும் அளவு கோலால் அளக்கப்பட்டு கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் திரிசூலம் ஊரில் உள்ள தர்மபுரீஸ்வரர் கோயிலில் சோழ மன்னன் முதாலம் குலோத்துங்க சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் செம்பூர் நாட்டு பல்லவராயன் என்பவரிடம் இருந்து சுரத்தூர் நாட்டு திருச்சுரமுடையார் கோயில் சிவபிரமனர்கள் 150 கலம் நெல்லை பெற்றுக்கொண்டு அதில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு வட்டியாக வரும் 37 கலம் நெல்லைக் கொண்டு திருச்சுரமுடையார் கோயில் இறைவற்கு மார்கழி திருவாதிரை நட்சத்திர நாளிலும், பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி ஆகிய திதிகளிலும் பால், தயிர், கோமியம், கோமூத்திரம்,

பஞ்சகவியம் முதலானவை கொண்டு அபிஷேகம், திருமஞ்சனம் போன்றவையும், மந்திர புஷ்பம், திருஅமுது போன்றவையும் படைப்பதாக உறுதியளித்துள்ளனர்.

**தை**

திருப்பூந்துருத்தியில் உள்ள புஷ்பவனேஸ்வரர் கோயிலில் 30 கழஞ்சு பொன் கொடுத்து அதில் இருந்து வரும் போலிசை என்னும் வட்டியை கொண்டு தை மாதத்தில் அபிஷேகம் நடத்த நெல் வழங்கப்பட்டுள்ளது.

**மாசி**

தஞ்சாவூர் மாவட்டம் திருசின்னம்பூண்டி ஊரின் சடையார் கோயிலில் சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் 30ம் ஆட்சி ஆண்டில் சைற்றியன் தாயனான தீரன் என்பவர் மாசி மகம் திருவிழாவின் நீராட்டுக்காக நெய், பால், தயிர், கோமியம் வழங்கவும், அமுதுபடி வழங்கவும் புரங்கிளியூர் நாட்டு பாம்பூர் சபையாரிடம் இருந்து ஒரு மா நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளார்.

மேற்கூறிய அதே கோயிலில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அவருடைய மனைவி கண்டன் மாறம்பாவையார் திருக்கடைமகாதேவருக்கு மாசி மகம் திருவிழாவுக்காக 17 கழஞ்சு பொன்னை கொடையாகக் கொடுத்துள்ளார். இதில் 10 கழஞ்சு பொன் கொண்டு திருவிழாவின் முதல் நாளில் இறைவனுக்கு பால், தயிர், நெய், இளநீர், திருவமுது, திருவிளக்குகள், பிராமணர்கள் மற்றும் அடியார்களின் உணவு என அனைத்துக்கும் பயன்படுத்த வேண்டும். மீதமுள்ள பொன்னில் வரும் வட்டி கொண்டு தினமும் மலர் மாலை சந்தானம், பிராமணர்கள் மற்றும் அடியார்களுக்கு உணவு, திருநீராட 108 கலசங்கள் வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பொறுப்பு சிரிகண்டபுரத்து துணி வணிகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திண்டிவனத்தின் முன்னூறில் உள்ள ஆடவல்லீஸ்வரர் கோயிலில் பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் 10ம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இதில் நாட்டார்கள் விழுவூர் என்ற ஊரின் பெயரை ஆடவல்ல கூத்தநல்லூர் என்று மாற்றம் செய்து இறையிலி நிலமாக கொடுத்துள்ளனர். இந்த ஊரில் இருந்து வரும் அனைத்து வரிகளையும் கொண்டு கோயிலின் மாசித் திருநாள் மற்றும் இதர பூசைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பங்குனி**

காஞ்சிபுரம் மாவட்டம் திருநீர்மலையில் உள்ள நீர்வண்ணர் ராமர் கோயிலில் பாண்டிய மன்னன் திரிபுவன சுந்தர பாண்டியனின் 16ம் ஆட்சி ஆண்டில் (கிபி.13ம் நூற்றாண்டு) திருவெண்காடுடையான் என்பவர் பங்குனி மற்றும் வைகாசி மாத திருவிழாவிற்காகவும், பம்மனக்கர் நாயனாரின் வழிபாட்டிற்காகவும் கோயில் தானத்தாரிடம் தானம் வழங்கி உள்ளார்.

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருபுறம்பியம் சாட்சிநாதர் கோயிலில் முதலாம் குலோத்துங்க சோழனின் 43ம் ஆட்சி ஆண்டில் உள்ள கல்வெட்டில் திருவெள்ளறை நல்லூரை சேர்ந்த அரிவாள் தாயனும், சிறுத்தொண்டரும் சேர்ந்து திருபுறம்பியம் மகாதேவருக்கு பங்குனி திருவிழாவின் போது திருஅமுது படைக்கவும், அடியார்களுக்கு அமுது படைக்கவும் தேவைப்படும் நெல்லுக்கான நிலங்களை கொடையாக கொடுத்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயிலின் மாசிலாமணி ஈஸ்வரர் கோயிலில் விஜயநகரப் பேரரசர் இரண்டாம் ஹரிஹரனின் 35ம் ஆட்சி காலத்தில் அம்பத்தூரை சேர்ந்த செய்ய நாராயணன் என்பவர் வெண்ணையூர் நாட்டில் உள்ள தனது நிலத்தில் நான்கில் ஒரு பங்கு நிலத்தை திருமுல்லைவாயில் உடைய நாயனார் கோயில் பங்குனி மாத திருவிழாவுக்காக கொடையாக கொடுத்துள்ளார்.

**நட்சத்திரம் திருவிழாக்கள்**

கோயில்களில் தமிழ் மாத திருவிழாக்கள் நடைபெற்றதைப் போலவே குறிப்பிட்ட நட்சத்திர திருவிழாக்களும் நடைபெற்றுள்ளன. மன்னர்கள், அவர்களின் குடும்பத்தார்கள், அதிரிகாரிகள் அல்லது செல்வந்தர்களின் பிறந்த நட்சத்திர நாளில் விழாக்கள் நடைபெற்றுள்ளன. தவிர குறிப்பிட்ட தெய்வங்களின் நட்சத்திரங்களுக்கும் விழாக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

**கார்த்திகை நட்சத்திரம்**

காஞ்சிபுரம் மாவட்டம் பெருநகர் ஊரில் உள்ள பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் உள்ள அறுமுகசுவாமிக்கு (முருகன்) கார்த்திகை நட்சத்திர நன்னாளில் அபிஷேகம் மற்றும் ஆராதனை செய்வதற்காக பச்சையப்ப முதலியார் மகன் தங்கவேலு என்பவர் நில தானம் வழங்கியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் நெய்யாடியப்பர் கோயிலில் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவிழா எடுப்பதற்காக 26 கலனே தூணிப்பதக்கு நெல் வழங்கக்கூடிய அளவில் நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**கேட்டை**

தஞ்சாவூர் மாவட்டம் திருசின்னம்பூண்டி ஊரின் சடையார் கோயிலில் உள்ள பல்லவ மன்னன் நிருபதுங்கனின் 22ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டின் படி திருக்கடை மகாதேவருக்கும், கச்சிப்பேட்டு திண்டீச்வரிக்கும் ஒவ்வொரு மாதமும் கேட்டை மற்றும் திருவாதிரை நட்சத்திரங்களில் திருநீராட்டுக்கு தேவையான பால், தயிர், நெய் கொடுக்கும் பொருட்டு 10 பசுக்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**திருவாதிரை**

தஞ்சாவூர் மாவட்டம் திருவீழிமிழலையின் திருவீழிநாதர் கோயிலில் இரண்டாம்

ராஜேந்திரனின் 3ம் ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. இதில் மன்னனின் பிறந்த நட்சத்திரமான திருவாதிரை நாளில் திருவிழா எடுப்பதற்காக இறையிலியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

**புனர்பூசம்**

தஞ்சாவூர் மாவட்டம் நெய்யாடியப்பர் கோயிலில் மாதந்தோறும் புனர்பூசம் நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாட்டிற்காக அரிசி, பருப்பு, கறியமுது, வாழைப்பழம், அடைக்காய், வெற்றிலை ஆகியவற்றுக்கும், கலம் (பானை) கொடுக்கும் குயவன், விறகுக்கு ஆகும் செலவு என அனைத்திற்கும் சேர்த்து நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**பூரம்**

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயின் மாசிலாமணி ஈஸ்வரர் கோயிலில் விஜயநகரப் பேரரசின் கிபி.1452ம் ஆண்டில் கோயிலின் திருப்பூரத் திருநாள் செலவுக்காக அகரம் என்ற கோழிப்பதாகை சதுர்வேதி மங்கலம் ஊரை இறையழிச்சி சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**ரேவதி**

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் உள்ள உடையார் கோயில் கரவந்தீஸ்வரர் ஆலயத்தில் மூன்றாம் இராஜேந்திரனின் 3ம் ஆட்சி ஆண்டில் தில்லை கூத்ததேவ தண்டநாயக்கர் என்பவர் தான் பிறந்த ரேவதி நட்சத்திர நாளில் திருவிழா எடுக்கவும், சிறப்பு வழிபாடுகள் செய்யவும் 3 வேலி நிலத்தை கொடையாக கொடுத்துள்ளார். இந்த நிலத்தில் இருந்து வரும் 360 கலம் நெல்லை வழிபாடுகள் செய்ய கொடுக்க வேண்டும்.

**சதயம்**

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் ராமலிங்கேஸ்வர சுவாமி கோயிலில் கிபி.11ம் நூற்றாண்டு கல்வெட்டின் படி, ஐப்பசி மாதம் சதய நட்சத்திர நாளில் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல், திருமேனிக்கு திருகாப்பு சாத்துதல், சிவகருந்தாடல், பெருந்திருவமுதுக்கு தேவையான நெய், தயிர், வெற்றிலை ஆகியவற்றிக்கும், திருப்பள்ளித்தாமம் போன்றவற்றிற்கும் விளக்கு ஏற்ற தேவையான எண்ணெய் உள்ளிட்ட செலவுகளுக்கும் சேர்த்து 40 காசுகள் கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

**திருவோணம்**

திருவண்ணாமலை மாவட்டம் பிரம்மதேசம் ஊரில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலில் கிபி.11ம் நூற்றாண்டை சேர்ந்த முதலாம் இராஜேந்திரன் ஆட்சி கால கல்வெட்டின் செய்திபடி திருமலைக்கு செல்லும் வழியில் இவ்வூரில் உள்ள ஜனநாதன் மண்டபத்தில் வைணவர்கள் தங்கி செல்வது வழக்கம். அவ்வாறு புரட்டாசி மாதம் திருவோண நாளன்று தங்கும் வைணவர்களில் 100 பேருக்கு உணவு வழங்க தேவையான பொருட்கள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பரணி**

பெரம்பலூர் மாவட்டத்தின் மதனகோபாலசாமி கோயிலில் முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் 18ம் ஆட்சி ஆண்டு தமிழ் கல்வெட்டில் மன்னனின் அக்கா பிறந்த நாளான பரணி நட்சத்திர நாளில் திருவிழா, அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்டவைகளுக்காக 12 வேலி நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**சுவாதி**

பெரம்பலூர் மாவட்டத்தின் மதனகோபாலசாமி கோயிலில் முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் 10ம் ஆட்சி ஆண்டு தமிழ் கல்வெட்டில் மன்னன் இதற்கு முன்னர் தான் கொடுத்த கொடையை மீண்டும் தன்னுடைய பிறந்த நாளான சுவாதி நட்சத்திர நாளில் திருவிழா நடத்துவதற்காக நிலம் கொடுத்துள்ளார்.

**ரேவதி**

நன்னிலம் வட்டம் திருவீழிமிழலையின் திருவீழிநாதர் கோயிலில் முதலாம் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தில் பாம்பூர் நாட்டுக் கோனார் என்பவர் தன்னுடைய பிறந்த நாளான புரட்டாசி மாதம் ரேவதி நட்சத்திரம் அன்று திருவிழா மற்றும் வழிபாடுகள் செய்ய 1500 கலம் நெல்லை திருவீழிமிழலை சபையாரிடம் கொடையாகக் கொடுத்துள்ளார். மேலும் இந்த நெல் கொண்டு திருவீழிமிழலை தேவர் மற்றும் ஸ்ரீகிருஷ்ணருக்கு திருஅமுது செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார்.

வருடத்தின் ஒவ்வொரு மாத திருவிழாக்களுக்கும் வழங்கப்பட்ட முக்கியத்துவத்தைப் போல மாதத்தில் வரும் நட்சத்திர விழாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு ஆதாரமாக பூந்தமல்லி அருகே உள்ள திருமழிசை ஜெகநாதர் பெருமாள் கோயிலில் கிபி.18 அல்லது 19ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டில் கோவிந்தப்ப ஐயங்கார் என்பவர் நிலங்களை பிராமணர் ஒருவரிடம் தானமாக வழங்கி பெருமாளுக்கு உரிய நட்சத்திர விழாக்கள் முறையாக நடைபெற வேண்டும் என ஏற்பாடு செய்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூரில் உள்ள அண்ணாமலையார் கோயிலில் கிபி.1680ம் ஆண்டில் சின்ன ரெங்கப்ப மழவராயர் என்ற பாளையக்காரரின் ஆட்சியில் அண்ணாமலையாருக்கு 27 நட்சத்திர திருவிளக்கு எரிப்பதற்காக 40 குழி நிலத்தை கோயிலின் தானத்தார் குருக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. 27 நட்சத்திரங்களின் முக்கியத்துவம் அறிந்தே இத்தகைய தானங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

கோயிலின் வழிபாட்டு முறைகள் என்பது நட்சத்திரங்களோடு தொடர்பு உடையது என்பதை கல்வெட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. சூரியனை பூமி நிர்ணயிக்கப்பட்ட பாதையில் வலம் வந்து கொண்டு இருக்கின்றது. அவ்வாறு சுற்றி வரும்பொழுது ஏற்படும் கால மாற்றங்கள், மற்ற கிரகங்களின் நகர்வுகள், நட்சத்திர மண்டலங்களின் பயணங்கள் என அனைத்தையும் கணக்கில் கொண்டு தமிழ் மாதங்களும், அதன் உள்ளடக்கமாக நட்சத்திர நாள்களும் தமிழ் முதுகுடிகளால் ஏற்படுத்தப்பட்டது. அந்த முதுகுடிகளை தான் இன்றைய தமிழ் சமூகம் ஞானிகள், முனிவர்கள், தவசிகள் என பெயரிட்டு அழைக்கின்றது. அவர்களின் வழிகாட்டுதலின் படியே கோயில்களின் அன்றாட செயல்பாடுகளும், ஊரும், வேளாண்மையும் நடைபெற்றது. எனவே ஆதி தமிழ் சமூகம் என்பது நாள் மற்றும் நட்சத்திரம் ஆகியவற்றை கணக்கிட்டு அறிவியல் முறைப்படி படியே இயங்கியது என்பதை கோயில் கல்வெட்டுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**தரவுகள்:**

[1.] விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - II , தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்:34, 2009.

[2.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - VIII, தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-II, 2016.

[3.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXII, செங்கற்பட்டு மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.

[4.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXX, திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.

[5.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXI, சேலம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-I, 2025.

[6.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXIV, விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-VI, 2025.

[7.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - 3, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்:36, 2010

[8.] தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - 6, கும்பகோணம் வட்டக் கல்வெட்டு, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்: 45, 2015.

**References:**

[1.] Viruthunagar District Inscriptions Volume-II, Tamilnadu Epigraphic Serial.No:34, 2009.

[2.] Tamilnadu Epigraphic volume - VIII, Thanjavur Vatta Kalvettukal Volume-II, 2016.

[3.] Tamilnadu Epigraphic volume-XXXII, Sengalpattu District Inscriptions Volume -II, 2025.

[4.] Tamilnadu Epigraphic volume -XXX, Tiruvallur District Inscriptions Volume -II, 2025.

[5.] Tamilnadu Epigraphic volume-XXXI, Salem District Inscriptions Volume -I, 2025.

[6.] Tamilnadu Epigraphic volume-XXIV, Viluppuram District Inscriptions Volume-VI, 2025.

[7.] Tamilnadu Epigraphic volume-III, Tamilnadu Epigraphic Serial.No:36, 2010

[8.] Tamilnadu Epigraphic volume-VI, Kumbakonam Vatteluththu Inscriptions, Tamilnadu Epigraphic Serial.No: 45, 2015.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam